மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

VI-XIII.	Madras: June 1911.	No - 6.
புத்தகம் - ௧௩.	சென்னப்பட்டணம்: ஜூன்மீ 1911.	இலக்கம் - 6.

நமது அரசசக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் வாழ்க!

ஜூன்மீ 22உயன்று லண்டன் மாநகரத்தில் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நமது அரச சக்ரவர்த்தியாகிய 5-வது ஜார்ஜுக்கும், சக்ரவர்த்தினி மேரிக்கும் வெகு விமரிசையாக பட்டாபிஷேகம் நிறைவேறியதைப்பற்றி மிகச் சந்தோஷப்படுகிறோம். பிரிடிஷ் ராஜ்ய முழுவதிலுமுள்ள ஜனங்கள் மிகுந்த ஆநந்தத்துடன் வாழ்த்துக் கடிதங்களை யனுப்பியிருக்கின்றார்கள். இந்தியாவிலிருந்து சில மகராஜாக்களும், பிரமுகர்களும் அக்காட்சியைக் கண்டு களிக்கவும் ராஜவிசுவாசத்தைக் காண்பிக்கவும் அவ்விடம் சென்றிருக்கிறார்கள்.

அக்காட்சியைப் பாராத இதர இந்திய கனவான்கள் எப்பொழுது நமது அரச சக்ரவர்த்தி டில்லிக்கு வந்து நாம் பார்த்து ஆநந்திக்குமாறு பட்டாபிஷேகம் செய்துகொள்ளுவார் என்ற நினைவுடனிருக்கின்றார்கள். இப்படி இருப்பது ஆச்சரியமல்ல. ஏனெனில் இந்தியர்களாகிய நாம் எப்பொழுதும் தொன்றுதொட்டு இராஜவிசுவாசத்தில் மிகப் பற்றுள்ளவர்கள். நமது சக்ரவர்த்தி நீடூழி வாழவேண்டும்! பிரிடிஷ் ராஜ்யம் தழைத்து ஓங்கவேண்டும்!! என்ற எண்ணமே ஒவ்வொரு இந்தியர் மனதில் பதிந்திருக்கிறது.

நமது அரச சக்ரவர்த்தி அவர்கள் இந்தியாவிற்கு வந்தகாலத்தில் இந்தியர்களுடைய நடை, உடை, பாவனை முதலியவைகளைச் செவ்வனே அறிந்திருக்கிறார்கள். இந்தியர்களாகிய தமது பிரஜைகளிடத்தில் மிக்க வாஞ்சையுண்டு. அவ்விதமே ராணியாருக்குமுண்டு.

இவர்கள் மனமுவந்து அனுப்பியிருக்கிற பின்வரும் கடிதத்தால் அவர்கள் மிக மகிழ்ச்சிகொண்டு அனுப்பியதாகத் தெரிகிறது.

முடிசூட்டு வைபவமும் சக்ரவர்த்தியின் செய்தியும்.

ஜியார்ஜ் சக்கரவர்த்தி ஹோம் செக்ரிடரியாகிய மிஸ்டர் சர்ச்சில்லுக்கு ஒரு கடிதம் பக்கிங்காம் அரமனையிலிருந்து ஜூன் மீ 29௳ அனுப்பியிருக்கிறார். அக்கடிதம் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.—

"என்னுடைய பிரஜைகளுக்கு, முடிசூட்டு வைபவமும் அதைச் சார்ந்த விசேஷாதிகளும் இப்போது முடிவுக்கு வந்துவிட்டன. அவை நடை-பெற்ற போதெல்லாம் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தில் உள்ள பிரஜைகளின் இருதயம் என்னுடனிருந்த தென்பதை நான் பூரணமாய் உணர்ந்து அவர்களுக்கு என்னுடைய மன்மார்ந்த நன்றியைச் செலுத்த விரும்புகிறேன்.

ஆலயத்தில் நடந்த விசேஷங்களுள் இந்த முடிசூட்டுவைபவமே மிக வசீகரமானதும் ஆழ்ந்து பதியக்கூடியதுமான விசேஷம் என்பதை நான் உணர்கிறேன். என்னை ஜனங்கள் தங்களுடைய அரசனென்று மனமாற உவந்து ஏற்றுக்கொண்ட இந்த விசேஷமே என்னுடைய வாழ்நாளில் ஏற்பட்டுள்ள அனுபவங்களுள் ஆத்மார்த்த அனுபவமென்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

வெஸ்ட்மின்ஸ்டரிலும், லண்டனைச் சேர்ந்த பல பாகங்களிலும் காட்டப்பட்ட விசுவாசத்தினால் மட்டும் நான் இவ்விதம் சொல்லவில்லை; ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களிலுமிருந்து வந்திருக்கும் நற்செய்திகளாலும் உணர்ந்து சொல்லுகிறேன். இத்தகைய இராஜபக்தி என் மனததில நன்றாய் ஊன்றி எனக்குப் புதிய ஊக்கத்தையும் நம்பிக்கையையும் கொடுத்துவருகிறது. ராணிக்கும்எனக்கும் ஜனங்கள் முழுமனத்துடன்காட்டிய உதாரமானவும் வெளிப்படையுமான அனுதாபம் எங்கள் பலத்துக்கு உண்மையான மூலாதாரமென்று நம்பி காலை முன் வைக்க நம்பிக்கையுடன் தைரியமுண்டாகிறது.

எனக்கும் என்னுடைய பிரஜைகளுக்கும் இடையில் எத்தகைய கஷ்டநிஷ்டூரங்கள் ஏற்பட்டபோதிலும் என் பிரஜைகளுடன் ஒன்றுசேர்ந்து தீரமாயும், சாவதானமாயும், பொதுநல நோக்கமாயும் கடவுளுடைய அருளைக் கொண்டு அவைகளை எதிர்த்துப் போராட முடியுமென்று நான் நம்புகிறேன்."

☞ ஜார்ஜ். R. I.

நமது சக்ரவர்த்தி இந்தியாவுக்கு அனுப்பிய செய்தி.

நமது அரச சக்ரவர்த்தி 5-வது ஜார்ஜின் பட்டாபிஷேகசடங்கு சிறப்பாக டெல்லியில் நடக்கும். ஆயினும் நமது அரசசகரவர்த்தி அச்சமயத்தில் நமக்கு பதில் அளிக்கலாமென்றிராமல் இப்பொழுது பின்வரும் கடிதத்தை நமது வைசிராய்க்கு அனுப்பியிருக்கிறாகள்.

"ராணி சக்ரவர்த்தினியும், நானும் இந்திய கவர்ன்மெண்டிலிருந்தும், இந்திய பிரஜைகளினிடமிருந்தும் தாங்கள் அனுப்பிய தந்தியில் அடங்கியுள்ள சந்தோஷசெய்தியை உற்சாகத்துடன் பெற்றுக்கொண்டோம். நீங்கள் எங்களது மனப்பூர்வமான வந்தனங்களை அவர்களுக்கு அளிப்பதுடன் அவர்களது இராஜவிசுவாசத்தைக்கண்டு மனமகிழ்ந்ததாகவும் அவர்களுக்கு உறுதியாகச் சொல்வீரென்று நம்புகிறோம்".

பத்திராதிபர்.

ரு-வது
சார்ஜ் அரசசக்ரவர்த்தியின் பட்டாபிஷேகம்.

வெஸ்ட்மின்ஸ்டர் ஆபிக்கோயிலில் நமது அரச சக்ரவர்த்தி 5-வது ஜார்ஜுக்கும், சக்ரவர்த்தினி மேரி அவர்களுக்கும் இம்மாதம் ஜுன்மீ 22உ வெகு விமரிசையாக பட்டாபிஷேகம் நடந்தது. இச்சடங்கின் முக்கியமான சிலவற்றை எழுதுகிறோம்:—

முன் காலத்து சடங்குக்கும் இப்பொழுது நடந்துவரும் சடங்குக்கும் வித்யாசம் உண்டாம். முன்காலத்தில் பட்டாபிஷேகத்திற்கு முதல்நாள் இராத்திரி புதிய சக்ரவர்த்தி லண்டன்மா நகரத்திலுள்ள கோபுரத்தைப் பாதுகாத்து வருவது வழக்கமாம. இங்கிருந்து பட்டாபிஷேகதினம் காலையில் புரப்பட்டு ராஜபிருதுடன் ஊர்வலம் வருவார். அப்பொழுது யாதொரு கெடுதலும் சம்பவிக்கா வண்ணம் குறிக்கப்பட்ட முக்யமான தெருக்களின்வழியே ஊர்கோலம் செல்லுமாம். வெஸ்ட் மின்ஸ்டர் ஆபீக் கோயிலில் ராஜ விருந்து நடக்குமாம். அச்சமயத்தில் அரசனுடைய வீரன் குதிரையின்மீது ஏறிக்கொண்டு பட்டத்துக்குவரும் அரசன் தகுதியானவனல்லவென்று சொல்பவனுடன் யுத்தம்புரிவது வழக்கம். முன்காலத்திலும் பட்டாபிஷேகத்துக்குரியது மதசம்பந்தமானவைகள்தான முக்கியமானது. இது இப்பொழுதும் அநுசரிக்கப்பட்டுவருகிறது. சிற்சில மாறுதல்கள் செய்யப்பட் டிருக்கின்றனவாம். லேடின் பாஷையை முன்வழங்கி வந்தார்களாம். இப்பொழுது இங்கிலீஷ் பாஷையை வழங்கிவருகிறார்கள்.

முன்காலத்துக்கும் இக்காலத்துக்குமுள்ளபேதம்.

இந்தியாவில் முன்காலத்தில் பட்டாபிஷேகம் நடந்தமாதிரியும் இப்பொழுது இங்கிலாந்தில் வழங்கிவரும் விதமும் ஆச்சரியமல்லவென்று அநேகர் அபிப்பிராயம். ஏனெனில், முடிசூட்டு, எண்ணெயிடுவது, முத்திரை மோதிரம் தரித்துக்கொள்வது முதலியவைகள் பார்சிக இந்தியா முதலிய தேசங்களில் நடந்துவரும் வழக்கமென எரல் ஆப் பூசாம் ஒரு புஸ்தகத்தில் வரைந்திருக்கிறார்.

நமது அரச சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் கோயிலுக்குள் போனபோது முக்கிய குருமார் தமது பரிவாரங்களுடன் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு முதலிய எல்லா திக்குகளை நோக்கி, "ஐயா, உங்களுடைய அரசராகிட 5-வது ஜார்ஜைப்பாருங்கள. இவர் உங்கள் அரசுக்கு இராஜன் என்பதில் ஐயமேயில்லை. இங்கு அரசரை வழிபடுவதற்கு வந்திருக்கிற நீங்களெல்லோரும் அவருக்கு வழிப்பாடு செய்ய உங்களுக்கிஷ்டமாவென கேட்டவுடன், அங்குள்ள யாவரும் மிகச் சந்தோஷத்துடன கெட்டியாய், "ஜார்ஜ் மகாராஜா வாழ்க" ஜார்ஜ் மகாராஜன் வாழ்க" என சொன்னார்கள்.

5-வது ஜார்ஜ அரச சக்ரவர்த்தி

உடனே குருமார் தெய்வ ஸ்துதி செய்து, நமது அரச சக்ரவர்த்திக் கெதிரில் நின்றுகொண்டு "ஐயா, தங்கள் கனத்துக்கு சத்தியம் செய்துகொடுக்க இஷ்டமாவென்று கேட்டார். "எனக்கு இஷ்டந்தான் என்று மகாராஜா அவர்கள் பதிலுறைத்து சட்டத்தையும்,வழக்கத்தையும் அநுசரித்து நியாயமாயும், சட்டப்பிரகாரம் அரசுபுரிவேன் என்று சத்யம் செய்தார்கள்.

எண்ணெயிடுதல்

பிரதான குருமார் அரசருக்குத் தலையிலும், மார்பிலும், உள்ளங்கைகளிலும் பூர்வகாலத்து விநோதமான கரண்டியில் எண்ணெயெடுத்து சிலுவையைப்போன்ற அடையாளம் செய்து, "அநேக இராஜாக்கள் ஆண்டு வந்ததுபோலவே தாங்களும் ஆண்டுவரும்படி கடவுள் தங்களுக்கு இப்பதவியை அளித்திருக்கிறார். அவருடைய கிருபா கடாட்சத்தால் உமது பிரஜைகளைக் காப்பாற்றியும் உமது அகண்ட இராஜ்யத்தை விவேகத்துடனும், நியாயத்துடனும், மதசம்ப்ரதாயத்துடனும் ஆண்டுவருவீராக" வென ஆசீர்வதித்தார்கள்.

நியாயம் பொருந்திய கத்தி

அரச சக்ரவர்த்தியின் வலதுகையில் கொடுப்பதற்கு முன் நியாயம் பொருந்திய கத்தியை பலிபீடத்தின்மீது வைத்து, பின்பு அதை எடுத்து சக்ரவர்த்தியைப் பார்த்து "இந்த நியாயம் பொருந்திய் கத்தியை வகித்து தேவாலயத்தைக் காப்பாற்றும், விதந்துகளுக்கும் அனாதைகளுக்கும் உதவி புரியுங்கள், அழிந்தவைகளைச் சீர்படுத்தி சரியாய் வைத்துக்கொள்ளுங்கள். தப்பிதங்களைக் கண்டித்து சீர்திருத்துங்கள், சரியாயிருப்பதை அவ்விதமேயிருக்கச் செய்யுங்கள்; இவ்விதம் செய்வதால் எல்லா தர்மகாரியங்களிலும் கீர்த்தியடைவீராக. ஏசு கிறிஸ்துநாதரை விசுவாசத்துடன் பணிந்து இராஜ்யத்தை ஆளும்" என ஸ்தோத்திரம் செய்து குரு அளித்தார்.

மாக்ஷிமை தங்கிய நமது அரச சக்ரவர்த்தி பலிபீடத்தில் கடவுளிடம் பெற்ற கத்தியை வைத்தார். பின்பு இக்கத்தி உரையின்றி சடங்கு முடிகிற வரையிலும் சக்ரவர்த்திக்கு முன் பிடிக்கப்பட்டது.

பின்பு அரச சக்ரவர்த்திக்கு இராஜ வுடுப்பு தரிக்கப்பட்டது. "கடவுள் தங்களுக்கு ஞானத்தை அளிப்பாராக. அவர் இரக்கத்தால் உம்மை அணைத்துக் கொண்டிருக்கட்டும். நற்காரியம் என்ற உடுப்பை உமக்கு தரிக்கட்டும்" என்று ஸ்தோத்திரம் முழங்கிற்று. சக்கரவர்த்திகையில் பலிபீடத்திலிருந்து சிலுவையையும், சக்கரம்போன்றுள்ள பரிசுத்தமான ஆர்ப் என்றதையும் எடுத்துக் கொடுத்தார்கள்.

மோதிரமணிந்துகொள்ளல்

பிரதான குரு அவர்கள் இராஜாக்கள் பட்டாபிஷேக காலத்திலணியும் முத்திரை மோதிரத்தை நமது சக்ரவர்த்தியினுடைய வலது கையில் சிறுவிரலில் போட்டார்கள். கடவுள் ஸ்தோத்திரம் செய்யப்பட்டது.

சிலுவை வடிவமமைத்த இராஜதண்டத்தை வலதுகையிலும், புறா வடிவமமைத்த இராஜதண்டத்தை இடதுகையிலும் வைத்துக்கொண்டார்.

இராஜதண்டம்.

வலது கையிலுள்ள தண்டத்தில் குலினன் வைரக்கல் பதிக்கப்பட்டிருக்கிறது. இது அரசருக்குரிய சக்தியையும், நியாயத்தையும் குறிக்கும். இடது கையிலுள்ளது புறாவடிவ மமைத்தது. இது சமம், நீதி முதலியவைகளைக் குறிக்கும். இதன் கட்டளை பின்வருமாறு:—"சமம், நீதி இவைகளைக்குறிக்கும் இராஜ தண்டத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். கடவுள் உமக்கு அளித்திருக்கிற சக்தியைக்கொண்டு இராஜ்யத்தை ஆளும், அவர் உமக்கு உதவிபுரிவார். அதிக அசட்டையாயிராமல் இரக்கமாயிருப்பீராக. இரக்கத்தை மனதில் பதிய வைத்துக்கொண்டு நியாயத்தை நிறைவேற்றுவீராக. துஷ்டர்களைத் தண்டித்து,நல்லவர்களை காப்பாற்றும். உமது பிரஜைகள் எந்தவழியில் நடக்கவேண்டுமோ அந்தவழியில் நடக்கும்படி செய்யும்."

எண்ணெயிடுவது வெகு முக்யமானது. கிரீடம் தரித்தல் ராஜாக்களுக்குரிய அடையாளங்களிலொன்று. இதுவும் அதிக முக்யமானது.

கிரீடம் தரித்தல்.

இது சுவர்ணத்தால் வட்டமாகச் செய்யப்பட்டிருக்கிறது. ஓரத்தில் நல்ல விலையுயர்ந்த முத்துகளும், இரத்தினங்களும் இழைக்கப்பட்டிருக்கின்றன. இது இன்னும் பலவகைச் சித்திர வேலைப்பாடுள்ளதாயும் ஆங்கிலேயர் மிகவும் விரும்புகிற "லிலி" என்ற புஷ்பத்தைப் போன்ற சித்திர வேலைகளுள்ளதாயும், முத்து ரத்தினம், வைடூரியம் முதலியவைகளால் இழைக்கப்பட்டதாயுமிருக்கின்றது. இது நாகரீகத்திற்குத் தகுந்த தாயுமிருக்கிறது.

இது முதலில் பலிபீடத்தில் வைக்கப்பட்டிருந்தது. பின்பு பிராதன குரு அவர்கள் இதை எடுத்து நமது சக்ரவர்த்திக்கு தரித்தார். உடனே இராஜ வம்சத்தவர்களும் தங்கள் தங்கள் கிரீடங்களைத் தரித்துக்கொண்டார்கள். குரு "கடவுள் நியாயமும், கீர்த்தியும் பொருந்திய கிரீடத்தையளிப்பாராக. எங்களது இவ்வித ஆசீர்வாதத்தால் உங்களது செங்கோல் செழித்து ஓங்குக" வெனசொன்னார். ஜனங்கள் "நமது சக்ரவர்த்தியைக் கடவுள் காப்பாற்றுக" வெனகரகோஷத்துடன் சொன்னார்கள். மேளதாளங்கள் கோஷித்தன. பட்டாபிஷேகச் சடங்குமுழுவதும் முடிந்தது என்று யாவருக்கும் தெரியுமாறு பீரங்கிகளின் சப்தம் கேட்டது.

உடனே பைபில் சக்ரவர்த்திக்கு இனாமாக அளித்தபின், அடியில் வருமாறு பிரதமகுரு ஆசீர்வாதம் செய்தார்:—

ஆசீர்வாதம்

"மாக்ஷிமை தங்கிய மகாராஜாவே! இப்புஸ்தகத்தை தங்களுக்கு இனாமாக யளிக்கின்றோம். இது இவ்வுலகத்திலுள்ளவைகளில் அதிக விலையுயர்ந்தது. ஞானம் இதிலிருக்கிறது. கடவுள் தங்களை ஆசீர்வதித்து ரக்ஷிப்பாராக. ஜனங்களுக்கெல்லாம் தங்களை அரசராக செய்திருக்கிறபடியால், தாங்கள் சௌக்யமாய் ஜீவித்திருக்கும்படி தீர்க்காயுளை அளிப்பாராக."

ஆசீர்வாத மானவுடன் அரச சக்ரவர்த்தி அவர்கள் சிம்மாசனத்தில் பிரதான குரு முதலியவர்களால் உட்கார வைக்கப்பட்டார்,

ராணியாருக்குப் பட்டாபிஷேகம்.

மேரி ராணியார் அவர்களுக்கு பட்டாபிஷேகம் பிரதான குருவால் செய்யப்பட்டது ஆனால் சடங்கு சக்ரவர்த்திக்கு செய்யப்பட்ட மாதிரியல்ல. ராணியாருக்கும் எண்ணெயிடப்பட்டது. ராணியார் வலதுகையில் நாலாவது விரலில் ஒரு மோதிரம் தரிக்கப்பட்டது. இராஜதண்டமும், புறாவடிவமமைந்த தந்தத்தால் செய்யப்பட்ட தண்டமும் கொடுக்கப்பட்டன. இவைகளை யெல்லாம் ராணியார் பெற்று அரச சக்ரவர்த்திக்கு முன்சென்று தலை வணங்கிவிட்டு, தமது சிம்மாசனத்தில் அமர்ந்தார்கள்.

சக்ரவர்த்தியை வணங்குதல்.

(Archbishop of Canterbury) பிரதம குருதான் முதலில் நமது அரச சக்ரவர்த்தியை முழங்காலிட்டு வணங்கி சத்யம் செய்தார்கள். மற்ற குருமார்களும் முழங்காலிட்டு வணங்கினார்கள்.

பின்பு இளவரசர், மற்ற இராஜ வம்சத்தார்கள் அரச சக்ரவர்த்தியை வணங்கி சத்யம் செய்தார்கள்.

காணிக்கை.

கடைசியில் அரச சக்ரவர்த்தியும் ராணியாரும் பலிபீடமிருக்கு மிடத்துக்குப்போய், தங்கள் கிரீடங்களையும், இராஜ தண்டங்களையும் ஓரிடத்தில் வைத்துவிட்டு சுவர்ணம், வஸ்திரம் முதலியவைகளை காணிக்கையாக யளித்தார்கள்.

வாழ்த்து

உடனே பாண்டு வாத்தியம் "நமது இறைவன் வாழ்க" வென்று முழங்கிற்று. இத்துடன் பட்டாபிஷேகச் சடங்கு முடிவு பெற்றது.

☞ பத்திராதிபர்.

முடிசூட்டு வைபவம்.

முடிசூட்டு வைபவத்துக்கென்று லண்டன் நகரத்தில் செய்யப்பட்டு வந்த அலங்காரங்களை ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் ஒவ்வொரு தெருவிலும் நின்று பார்த்தார்கள். வெஸ்ட்மின்ஸ்டர் அபேயிலும் அதற்குப் போகும் வழியிலும் திரளாக ஜனங்களிருந்தார்களாம். லண்டன் போலீசாரர்களும் ஜனங்களும் ஒத்து உழைத்தார்களாம்.

வியாழக்கிழமை ஊர்வலங்கள்

வியாழக்கிழமை தனித்தனியாக ஊர்வலங்கள் விடப்பட்டன. மூன்று ஊர்வலங்களிலும் குதிரைப் பட்டாளத்தாரே புடைசூழ்ந்துசென்றார்கள. முதல் ஊர்வலம் ராயல் பிரதிநிதிகளுக்கும் மற்றப்பிரதிநிதிகளுக்கும்ஏற்பட்டதாயிருந்தது. அதற்குப் பதினான்கு வண்டிகளாம். இரண்டாவது ஊர்வலம் ஐந்து வண்டிகள் உடையதாயிருந்தது. வேல்ஸ் இளவரசரும், மற்றும் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களும அந்தவண்டிகளில் சென்றார்கள். மூன்றாவது ஊர்வலம் ஜியார்ஜ் சக்ரவர்த்திக்கும் மேரி சக்ரவர்த்தினிக்கும் ஏற்பட்டது. காலாட்படைகள், குதிரைப்படைகள், கப்பற்படைகள் முதலியன சக்கரவர்த்தியின் ஊர்வலத்தின் இருபுறங்களிலும், முன்னும் பின்னும் சென்றன. லார்டு கிச்சனர் சக்கரவர்த்திக்கு அடுத்தாப்போல் சென்றார்.

வெள்ளிக்கிழமை ஊர்வலங்கள்

வெள்ளிக்கிழமை யன்று நடைபெற்ற ஊர்வலக்காட்சி விமரிசையாக இருந்தது. குடியேற்ற நாட்டாரும் இவ்வூர்வலத்தில் சென்றார்கள். இரண்டாவது வண்டியில் ஜெனரல் போத்தாவும், ஸர் ஜோஸப் வார்டும் சென்றார்கள். அந்த வண்டிக்குப் பிறகு எட்டு இந்திய அரசர்களையுடைய வண்டி சென்றது. அதற்கு இந்திய ராணுவப் பிரதிநிதிகளும், வாலண்டியர்களும் தலைமைவகித்துப் போனார்கள். கடைசியில் சக்கரவர்த்தியின் வண்டி சென்றது. கௌரவ எய்டிகாங்குகளாக குவாலியர் மகாராஜா, பிகானிர் மகாராஜா, கூச்பிகார் மகாராஜா முதலானவர்கள் சக்கரவர்த்தியுடன் சேர்ந்தாப் போலவே சென்றார்கள். தவிர, அந்நியநாட்டு ராணுவ வீரர்களும், கப்பற்படைக்காரரும் இந்த ஊர்வலத்தில் பின் தொடர்ந்து சென்றார்கள்.

இளவரசர்கள் வருகை.

நாற்பது இளவரசர்கள் லண்டன் நகரத்தில் முடிசூட்டு வைபவம் பார்பபதற்கென்று வந்திருந்தார்கள். அனேக ரயில்வே ஸ்டேஷன்கள் மிகவும் அழகாய் அலங்கரிக்கப் பட்டிருந்தன. கானாட்டுக் கோமகனும், கோமகளும் லண்டன் வந்துசேர்ந்து உயிர் காவலர்கள் படைசூழத் தங்கள் மாளிகைக்குச் சென்றார்கள் ஜியார்ஜ் சக்கரவர்த்தியும் மேரி சக்கரவர்த்தினியும் இன்று பிற்பகலில் பக்கிங்ஹாம் அரண்மனையில் கானாட்டுக் கோமகனையும் கோமகளையும் வரவேற்று உபசரித்தார்கள்.

லண்டனில் முடிசூட்டு வைபவம்.

உலகத்தின் பல பாகங்களிலும் முடிசூட்டுத் தினத்தன்று கொண்டாட்டங்கள் நடந்தனவென்று பற்பல இடங்களிலிருந்தும் தந்திகள் வந்தன.

பக்கிங்ஹாம் அரண்மனையில் விருந்து.

பக்கிங்ஹாம் அரண்மனையில் தங்கியிருக்கும் ராஜ குடும்பத்தார்களுடன் ஜியார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும், முடிதரித்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பியவுடன் விருந்துண்டார்கள்.

விபத்துகள்.

23௳ நேர்ந்த விபத்துகள் மிகவும் சாமானியமானவை யென்றே சொல்லவேண்டும். எண்பத்தெட்டுபேர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். இவர்களுள் அநேகர் களைப்பினால் மயங்கி விழுந்து விட்டவர்களே யாவார்கள். இரண்டு ஸ்திரீகளுக்குக் கால்கள் முறிந்து போய்விட்டன. ஒரு கானடியன் போர்வீரன் குதிரையிலிருந்து விழுந்து மண்டையை உடைத்துக் கொண்டான். துப்பாக்கி ஒன்று வெடித்து அதனால் ஒரு மனிதன் இறந்துவிட்டான். குதிரை மிதித்து இருவர் இறந்தார்கள். கேம்ரிட்ஜில் ஒரு மனிதன் ஏதோ அலங்காரஞ் செய்துகொண்டிருந்தபோது உயரத்திலிருந்து கீழே விழுந்து இறந்துபோனான்.

இந்திய ஊர்வலம்

இன்று இந்திய ஊர்வலம் விடப்பட்டது ஸர். எட்மண்டுபாரோவும், வேறு பல உத்தியோகஸ்தர்களும் குதிரையின் மீது வந்தார்கள். இவர்களுக்குப் பிறகு ஆறுவண்டிகள் சென்றன. முதல் வண்டியில் பரோடா மகாராஜாவந்தார். இர

ண்டாவது வண்டியில் ஹோல்கார் மகாராஜாவும், ஆகாகானும் சென்றார்கள். மூன்றாவது வண்டியில் போபால்பீகமும், அவருடைய புத்திரி புத்திரர்களு மிருந்தார்கள். நான்காவது வண்டியில் பாட்டியாலாமகாராஜா, ஷாப்பூராராஜா இருவரும் சென்றார்கள். ஐந்தாவது வண்டியில் ராஜ்பீப்லா ராஜா, புதுக் கோட்டைராஜா முதலானவர்களிருந்தார்கள. ஆறாவதுவண்டியில் கொண்டல் தாக்கூர் சாஹிப் இருந்தார்.

சிறுவர்களுக்கு விருந்து.

ராஜ சக்கரவர்த்தி, சக்ரவர்த்தினிகள், வேல்ஸ் இளவரசர், பிரின்ஸஸ் மேரி, பிரின்ஸ் ஆல்பர்ட், பிரின்ஸ் ஜியார்ஜ் சகிதம் 30௳ பிற்பகலில் பக்கிங் ஹாம் அரண்மனையைவிட்டுப் புறப்பட்டு கிரிஸ்டல் அரண்மனைக்கு மோட் டார் வண்டியில் சென்று லட்சம் சிறுவர்களுக்கு விருந்து செய்வித்தார்கள். முடிசூட்டு வைபவத்தின்போது நடந்த மற்ற விசேஷங்களைக் காட்டினும் இந்த விசேஷமே சக்கரவர்த்தியின் மனதில் ஆழ்ந்து, என்றும் மறக்கமுடி யாதபடிப் பதிந்திருக்கும் விசேஷமாம். குழந்தைகள் அலங்காரஞ் செய்து கொண்டு சாந்தமாயும் அன்பாயும் தம்மிடம் நடந்துகொண்டமாதிரி தமக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்றும், லண்டன் நகரம் தன் குழந் தைகளைப்பற்றிப் பெருமைபாராட்டிக்கொள்ளக் காரணமிருக்கிறதென்றும், சிறுவர்களுடைய க்ஷேமத்துக்குற்றவிதமாய்க் கல்விபோதிக்கும் விஷயமாய்த் தமக்கு இருக்கும் விருப்பம் இவ்வளவென்றும் கண்டு ஒரு செய்தி சக்ர வர்த்தி யனுப்பியிருக்கிறார்.

ஜியார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும் ஜூன்மீ 30௳ சாயந்திரம் டௌனிங் தெருவில் மிஸ்டர் ஆக்ஸ்வித்தின் விருந்தினராய் இரு ந்தார்கள். மந்திராலோசனை சபையைச் சேர்ந்த அனேகர் விருந்துக்கு வந் திருந்தார்கள். லார்டு லாண்ட்ஸ் டௌன், லேடி லாண்ட்ஸ் டௌன், லார்டு கர்ஜன், மிஸ்டர் பால்பர், கவுண்டஸ் மிண்டோ முதலானவர்கள் வந்திருந்த வர்களுள் முக்கியஸ்தர்கள்.

பலமான மழை. இன்றிரவும் லண்டனில் தீபாலங்காரம் முதலியவை செய்யப்பட்டிருந் தன. ஆனால் பலமான மழை பெய்ததால் கூட்டங்கள் கலை ந்துபோயின. ஜனங்கள் ஊக்கமும் உற்சாகமும் குறைந்திரு ந்தார்கள்.

வாழ்த்துச் செய்திகள். ஜியார்ஜ் சக்கரவர்த்திக்கு மகுடாபிஷேகம் நடந்த சமயத்தில் எண்ணி றந்த வாழ்த்துச் செய்திகள் கலோனியல் ஆபிசில் வந்து குவிந்தன.

கடற்படையைபார் வையிட்டது. ஜியார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும், ஸ்பிட்ஹெட்டுக்குச் சென்று கடற்படையைப் பார்வை யிட்டார்கள்.

அநாதிப்பிள்ளை லண்டன்மா நகருக்கு அதிகாரியான கதை.

(144-வது பக்கத்தொடர்ச்சி.)

பிட்ஸ்வுரானுடைய கப்பல், யாத்திரைக்குச் சென்றதே. அதைப்பற்றி விசாரிப்போம். கடலில் போகும்போது ஒருபெரிய புசல் அடித்து அநேக நாள் துன்பப்பட வேண்டியதாயிற்று. கடைசியாய்ப் பலநாள் கழித்துப் புசல் நின்றதும் கப்பல் தலைவனுக்கு இன்ன இடத்தில் தான் இருக்கிறோம் என்பது தெரியவில்லை. தற்காலத்தில் இருப்பதுபோன்ற நுட்பமான கருவிகள் அக்காலத்தில் கண்டு பிடிக்கப்படவில்லை. 'போகும் இடத்திற்குப்போகட்டும்' என்று கப்பலைச்செலுத்திப் போகவே ஆப்பிரிக்கா கண்டத்தின் ஒரு மூலையில் போய்ச்சேர்ந்தார்கள். அத்தேசத்தை அவர்களில் ஒருவரும் முன்னே கண்டதுமில்லை, கேட்டதுமில்லை; கடற்கரையில் இறங்கி தக்க இடம் பார்த்து கப்பலை நிறுத்தி இறங்கினார்கள்.

அவ்விடத்தின் தன்மை எப்படி இருக்கின்றதென்று அறிந்துவர சில மாலுமிகளைக் கூட்டிக்கொண்டு கப்பல் தலைவன் புறப்பட்டான். மற்றவர் கப்பலைக் காத்துக்கொண்டு இருந்தனர். அத்தேசத்தார் தாமிர வர்ணமாய் இருந்தார்கள்; பார்வைக்கு நாகரீகம் அற்றவர் போலவே தோன்றிற்று; ஆனால் வெள்ளைக்காரர்கள் தம்தேசத்திற்கு முன்வந்து வியாபாரம்செய்து இருக்கிறபடியால் அவர்களைச் சந்தோஷத்தோடு வரவழைத்தது மல்லாமல் அவர்களுக்குவேண்டிய உணவுப்பொருள்களையும் கொடுத்தார்கள். மேலும் பலர் தம் பெண்டு பிள்ளைகளுடன் கப்பலுக்கே நேரேசென்று அவர்களிடமிருந்து கண்ணாடிக்குண்டு, பித்தளைப்பாத்திரம், இரும்புவளையம் இவற்றை விலைக்கு வாங்கிக்கொண்டு அதற்கு மாறாக தங்கத்தையும், தந்தங்களையும் இன்னும் விலையுயர்ந்த தோல்களையும் கொடுத்தார்கள்.

ஆங்கிலேய வர்த்தகக்கப்பல் ஒன்று தன் நகரத்திற்குவந்து, துறைமுகத்தில் நிற்கின்றதென்பது சீக்கிரம் அவ்வூர் அரசனுக்குத்தெரிந்தது. அதைக் கேட்டதும் அவ்வரசன் தனது பிரபுக்களில் பேர்போன சிலரைத் தக்க பரிசுகளோடு அனுப்பி, கப்பல் தலைவனையும் அவனது முக்கியமான சிப்பந்திகளையும் தன் அரண்மனைக்கு அழைத்துவரும்படி கட்டளையிட்டான். பிரபுக்களே வந்து அழைக்க கப்பல் தலைவன் சம்மதித்தான் என்பது சொல்ல வேண்டுவது இல்லையே!! உடனே அரண்மனைசென்று அரசன் அனுப்பிய பரிசுக்குத்தக்கபடி தாங்களும் பரிசளித்து, இருதிறத்தாரும் தங்கள தேசத்தைப்பற்றிய விஷயங்களையும் வியாபாரத்தின தன்மைகளையும், ஜனங்களின் நாகரீகம், பழக்கவழக்கம் இவற்றைப்பற்றியும் கூடியவரையில் சாடைகளால் பேசயறிந்து கொண்டனர்.

ஆங்கிலேயர் தன் அரண்மனைக்கு வந்ததுபற்றித் தன்சந்தோஷத்திற்கு அறிகுறியாக ஒருபெரிய விருந்து நடக்கவேண்டுமென்று அரசன உத்தரவு

செய்தான். ஆங்கிலேய கப்பல் தலைவனும், அவனுடைய சிப்பந்திகளும், அரசனும், இராணியும் மற்ற அரண்மனை உத்தியோகஸ்தர்களும் சாப்பிட உட்கார்ந்தார்கள். மிகவும் மரியாதையாய் ஒவ்வொருவருக்கும் உபசாரங்கள் நடந்தன. ஆங்கிலேயருக்கு அவ்வரசன்பேரில் உண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. மேஜையின்மேல் பனிபோல் வெள்ளிய துணியைவிரித்து, அதன் மேல் போஜன பாத்திரங்களை வைத்தார்கள். அப்பாத்திரங்களில் ஆகாரங்களை நிரப்பியவுடனே; 'கீச்கீச்' என்றும், 'சரசர' வென்றும், 'கடக்கடக்' என்றும் சத்தம் மிக அதிகமாய் உண்டாகவே, என்னகாரணம் என்றுவெள்ளைக்காரர்கள் பிரமித்துப் போய்விட்டனர். உற்றுப்பார்க்கவே அவ்விடத்தில் உள்ள ஒவ்வொரு துவாரத்திலிருந்தும், மூலை முடக்குகளிலிருந்தும், கூரையினின்றும் எல்லாப்பக்கங்களிலிருந்தும், பல எலிகளும் சுண்டெலிகளும் ஏராளமாய் புற்றிலிருந்து ஈசல் புறப்படுகிற மாதிரி புறப்பட்டுவிட்டன. இவ்வாறு வளைகளிலிருந்து புறப்பட்ட ஆயிரக்கணக்கான விநாயகச் சேனைகள் மேஜையின்பேரில் இருந்த ஒவ்வொரு வஸ்துவையும் தின்றுவிட்டு ஒருநொடியில் மேஜையைக்காலி செய்துவிட்டன!!

ஆங்கிலேயர் இவ்வளவு தைரியமுள்ள கொழுத்த எலிகளை இதற்கு முன் கண்டதில்லை. ஆனால் அரசனுக்கும் இராணிக்கும் அவ்வூர் பிரபுக்களுக்கும் அது மிக ஸகஜமாகவே தோன்றிற்று. அரசனும் அன்னியருக்கு விருந்துபோடும் இப்பொழுதுகூட இந்த 'சனியன்' விடுவதில்லையே என்று மனவருத்தம் கொண்டு தலைகுனிந்துகொண்டனர்.

இதைப்பார்த்த கப்பற்றலைவன் "ஐயா, இந்த ஜெந்துக்கள் உங்கள் தேசத்தில் இவ்வளவு தைரியமாய் இருக்கக் காரணம் என்ன? ஏன் இவற்றை நீங்கள் கொல்வது இல்லை? இவற்றை நாசம் செய்தால் ஏதாவது தோஷம் உண்டென்று உங்கள் சாஸ்திரங்கள சொல்லுகின்றதோ? எங்களுக்கு இதைக்கண்டதும் உண்டான ஆச்சிரியத்திற்கு அளவில்லை" என்றான். அரசன் "ஐயா, இக்கஷ்டத்தைத் தொலைக்க எவ்வளவு வழிசெய்தாய்விட்டது; ஒன்றும் பயன்படவில்லை; ஒன்றைக்கொன்றால் 15 குட்டி அதிகமாகின்றது. என்ன செய்தபோதிலும் இவை நசிப்பதில்லை; இவைகளின் துணிவோ சொல்லிமுடியாது; ஒருவருக்கும் பயப்படுவதில்லை. இன்னும் சிலநாளில் இவ்விடமெல்லாம் எலிபெருத்து மனிதனுக்கு தின்னக்கூட ஒன்றும் இல்லாதபடி செய்து விடும் என்றுஎண்ணுகிறேன். இவற்றை நிர்மூலமாக்க ஒருவழி யாராவது சொல்லுவானானால் அவனை என் நகரில் உள்ள பெரிய பிரபுவினும் மிக்க அதிகமான பணக்காரனாக்குகிறேன்" என்றான். இதைக் கேட்ட கப்பல் தலைவன் "அரசே, என் கப்பலில் ஒருபிராணி இருக்கின்றது; அதன் குணம் இவ்வளவென்று வர்ணிக்கமுடியாது. சுளுவாய்ச் சொல்லப்போனால் வெள்ளம் வெள்ளமாய் எலியிருப்பினும் அவற்றை அரைநொடியில் சின்னாபின்னப்படுத்தி வெற்றியடையும்! எலிகளுக்கு எமன் என்றுசொல்லலாம்" என்று பலவாறுகப் புகழ்ந்தான். எப்படியிருப்பினும் கப்பல் தலைவன் வர்த்தகன் தானே!! வியாபாரத்திற்கு வந்தவர்கள் தங்கள் சரக்கை மெச்சிப் பேசிக்கொள்வது அருமையா!!

கப்பல் தலைவன் பேச்சையும் அவனது அருமைப்பிராணியின் ஆச்சிரிய சக்தியையும் கேட்ட இராணியும், இராஜாவும் பிரபுக்களும் தங்களை மறந்து ஆனந்த பரவசமாய் தங்கள் இடத்திலிருந்து எழுந்துபோய் அந்த ஆச்சரியமான பிராணியைக்கொண்டு வரவேண்டுமென்றும் அதன் அற்புத சக்தியைக் காட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். தலைவன் சிலரை அனுப்பி, டிக்கினுடைய பூனையை ஒரு கூடையில் வைத்துக்கொண்டு வரும்படி உத்தரவு செய்தான். பூனையும் வந்துசேர்ந்தது. மறுமுறை சமையலும் முடிந்து எல்லாருக்கும் சாப்பாடுபோட ஆரம்பம் ஆயிற்று; பாத்திரங்களில் சாப்பாடு நிரப்பவே ஒவ்வொன்றாய் எலிகள் புறப்பட்டன; டிக்கின் பூனை எலி கூட்டத்தைக்கண்டதும் ஆட்டுமந்தையில் புகுந்த புலிபோன்று—ஒரே பாய்ச்சலாய்ப்பாய்ந்து பலவற்றைக் கடித்துத் துண்டு துண்டாக்கி, சிலவற்றைக்கொன்று சிலவற்றைக்கடித்து, சிலவற்றைப்பூறி, ஆனந்தவேட்டையாடவே ஒருநொடியில் 'தப்பினால்போது' மென்று எலிகள் ஓடி ஒளிந்துகொண்டன. வீர சிங்கம்போல் நின்றது டிக்கினது பெண்பூனை!! இப் பூனையின் விசேஷசக்தியைக் கொண்டாடாதவர்களே கிடையாது; அரசன், அரசி பிரபுக்கள்—எல்லாரும் ஆனந்தக்கூத்தாடினார்கள் சிலர் அதைக்கட்டி முத்தமிட்டுக்கொண்டனர். ஆனால் அவ்வளவு சக்தியுள்ள மிருகத்தை எப்படித் தொடுவது என்று இராணி, முதலில் பயந்தாள். ஆனால் வேட்டைமுடிந்ததும் பசுப்போல் மேஜையின்மேல் பதுங்குவதைக்கண்ட இராணி மெதுவாய் அதன் முதுகைத்தடவத் தொடங்கினாள். உடனே அது ஒருதாவாய்த் தாவி இராணியின் மடியில்போய்ப் படுத்துக்கொண்டு அவளுடன் கொஞ்சி விளையாடத்தொடங்கிற்று. இராணியும் அதிக அன்போடும், ஆதரவோடும் தன் செல்வக்குழந்தையைப்போல் சீராட்டினாள்.

இவ்வருமைப் பூனையை அவ்வூரிலேயே விட்டுப்போகவேண்டுமென்று இராணியும் இராஜாவும் வேண்டிக்கொண்டார்களென்பதற்கு என்ன ஆக்ஷேபணை! வியாபாரம் செய்ய வந்திருக்கும் கப்பற்றலைவனும் தான் எதிர்பாராத அதிர்ஷ்டம் தன்க்கு வந்து வாய்த்ததற்குச் சந்தோஷப்பட்டுச் சரியென்று ஒப்புக்கொண்டான். இராணிக்கும் டிக்கின் பூனைக்கும் அதிக சிநேகம் ஏற்பட்டது. பூனை டிக்கைவிட்டுப் புறப்பட்டது முதல் இவ்வளவு அருமையாய்த் தன்னுடன் விளையாடியவர்களையே காணவில்லை. ஆதலால் டிக்கினிடத்தும், ஆலிஸ் இடத்தும் எப்படி விளையாடிய பக்ஷமாய் இருந்ததோ அதேமாதிரி இருந்தது. இராணி இந்தப்பூனையின் சரித்திரத்தை முற்றிலும் கேட்க விருப்பம்கொண்டு கப்பல் தலைவனை வரவழைத்தாள். எல்லா விஷயத்தையும் தெரிந்துகொண்டபின் இப்பூனைக்குக் காலவளவிலே நாசம் வந்துவிட்டால் என்ன செய்வது என்று சொல்லி இராணி ஏங்கினாள். தலைவன் "அம்மா! நீர் விசனப்படவேண்டாம்; இப்பூனை கப்பலில் பிரயாணம் புறப்பட்டபின் பல குட்டிகள்போட்டது; அவற்றை பத்திரமாய் வளர்த்து வருகிறோம். அவையெல்லாவற்றையும் வேண்டுமானாலும் உங்களிடம் விட்டுப்போகிறோம்" என்று இராணியைத் தேற்றினான். உடனே இராணி, "அப்படியானால் நீங்கள் இந்தப் பூனையை விட்டிங்டனிடம் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள். என்னுடன் பழகி இம்மாதிரி விளையாடும் பூனை சொந்தக்காரனிடம் எப்படி விளையாடாது? நானே இவ்வளவு அன்பு பாராட்டுகிறபோது வளர்த்தவர் எவ்வளவு அன்பு பாராட்டுவர். இப்பூனையைத் தங்களிடம் கொ

டுக்கும்போதே மிகவும் வருத்தப்பட்டதாய்ச் சொன்னீர்கள் ! அப்படி விசனிப்பது நியாயம்தானே. மேலும் "வேம்புக்குப் பிறந்தால் வேறு குணம் வருமோ" என்றபடி, இதன் குட்டிகளும் இதைப்போலவே எலிவேட்டையாடும்; ஆகையால் எங்களுக்கு அவற்றையெல்லாம் கொடுத்துவிட்டு இந்தத் தாய்ப்பூனையை நீங்கள் சொந்தக்காரனிடம் சேர்ப்பித்துவிடலாம்" என்றாள்.

அவள் விருப்பத்தின்படியே பூனையை மறுபடி கூடையில் போட்டு கப்பலுக்குக் கொண்டுபோயினர். பூனையின் குடும்பத்திலுள்ள "குழந்தைகளை" யெல்லாம் அரசனுக்கும் அரசிக்கும் 'தத்தக்' கொடுத்துவிட்டார்கள். கப்பல் தலைவனுக்கும் அவனுடைய மற்ற மாலுமிகளுக்கும் ஏராளமான பரிசு கிடைத்தன. இத்தோடு, தனியாய், அவ்வருமைப் பூனையின் சொந்தக்காரனை விட்டிங்டனுக்கு அதிக பணமும், பரிசுகளும் ஆபரணங்களும் கொடுத்து அனுப்பினார்கள். காப்டன் கொண்டுவந்த சாமான்கள் ஒன்றுகூட மிஞ்சவில்லை. எல்லாம் அந்நகரத்திலேயே விற்பனை ஆய்விட்டன. மறுபடி தேசத்திற்குத் திரும்ப எண்ணங்கொண்டு, வேண்டிய உணவுப்பொருள்களையும், ஆடு, கோழி முதலியவற்றையும், நீர், எண்ணெய், விறகு முதலிய சாமான்களையும் சேகரித்து வைத்துக்கொண்டான்.

☞ வாயில் காப்போன்.

பரோமிடர் பம்புகள் இவற்றைப்பற்றி.

போன பாடத்தில் வாயு பதார்த்தங்களின் தன்மைகளைப்பற்றிப் பேசினோமல்லவா? அவ்விடத்தில் முக்கியமாய் காற்றையே வாயு பதார்த்தங்களுக்கு ஒரு உதாரணப் பொருளாய் எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்தோம். இப்பொழுதும் அப்படியே செய்வோம். காற்றுக்கு—வாயு பதார்த்தங்களுக்கு—அளவு உண்டென்று முன்னமேயே சோதனைசெய்து இருக்கிறோம். அது உங்களுக்கு ஞாபகம் இருக்குமென்று நம்புகிறேன். அதிக ஜாக்கிரதையுடன் செய்த சில பரிக்ஷைகளால் 1 அடி நீளம், 1 அடி அகலம், 1 அடி உயரம் உள்ள ஒரு பெட்டியில் அடைக்கக்கூடிய காற்று 3 ரூபாய் கனம் உள்ளதென்று கண்டுபிடித்து இருக்கின்றனர். அதே அளவு உள்ள ஜலம் காற்றைவிட 773 மடங்கு அதிக பளுவானது. ஆகையால் வாயுவின் எடை மிகக் குறைவாய் இருந்தாலும், அதற்கு எடை உண்டென்பதை நாம் மறக்கக்கூடாது. ஒரு டம்ளரிலிருந்து வாயுவை உறிஞ்சிவிட்டால் "அது முன்னிருந்ததைவிட எடை குறைவாய் இருக்குமா? அப்படி தோன்றுகிறதில்லையே" என்று நீங்கள் கேட்பீர்களாயின் அப்படி நமக்குத் தோன்றாவிட்டாலும் நயமான தராசுகளைக்கொண்டு அதன் எடைக்குறைவை நிரூபிக்கலாம். முன் ஒரு பாடத்தில் ஜலப் பொருள்களுக்கு கனம் உண்டு என்றும், அதனால் அப் பொருள்களில், கீழே போகப்போக அழுத்தம் அதிகப்படுகின்றது என்றும் சொன்னோமல்லவா? காற்றிற்கும் எடை இருப்பதினால் இதிலும் அடியே போகப்போக அழுத்தம் அதிகமாய்க் கொண்டும் மேலே போகப்போக அழுத்தம் குறைந்துகொண்டும் வரவேண்டியதில்லையா? என்று ஒரு

சந்தேகம் பிறக்கலாம். ஜலத்தில இருப்பது போலவேயே காற்றிலும் கீழே வரவர அழுத்தம் அதிகமாகின்றது. மேலே செல்லச்செல்ல அழுத்தம் குறைகின்றது. தரையின் சமீபத்தில் காற்றின் அழுத்தம் அதிகம். 4 மைல் தூரம் போய்விட்டால் அழுத்தம் பாதிதான். இம்மாதிரியே மேலே போகப் போக அழுத்தம் மிகக்குறைவு; ஆனால் ஜலத்திற்கும் காற்றிற்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அதைப்பற்றி போன பாடங்களில் சொல்லியிருந்தபோதிலும்கூட, மறுபடி சொல்வதில் நன்மையுண்டு. ஜல பதார்த்தம் எவ்வளவு அழுத்தின போதிலும் இலேசாய்ச் சுருங்கக் கூடியவை அல்ல; ஆனால் காற்றும் வாயு பதார்த்தங்களும் அவ்வாறல்ல; அழுத்தம் அதிகமானால் தம்மளவில் குறையுமென்றும் ஆனதுபற்றி பொருள் நெருக்கம் அதிகப்படும் என்றும் கவனிக்கவேண்டும். பூமிக்கு மேலே உள்ள காற்றெல்லாம் அழுத்துவது பற்றி பூமிக்குப் பக்கத்தில் அழுத்தம் வெகு அதிகம். ஆகையால் அவ்விடங்களில் உள்ள காற்றின் பொருள் நெருக்கம் அதிகம். 4 மைல் தூரத்திற்கு அப்பால் அழுத்தம் கடற்கரையில் இருப்பதைவிட பாதிதான்; ஆகையால் அவ் விடங்களில் காற்றின் டென்ஸிடியும் பாதியே; மேலே போகப் போக வாயுவிற்குப் பொருள் நெருக்கம் மிகக்குறைவு. புகைக்கூண்டில் ஏறிச்செல்லும் சிலர் 6, 7 மைல்தூரம் போய்விட்டால் அங்கே இருக்கும் காற்று மிக இலேசானது பற்றி மூச்சுவிடக் காற்றுப் போதாமல் மூர்ச்சை அடைந்து விடுகின்றனர். வாய், மூக்கு, காதுகளில் இரத்தம் வழியும். உடனே கீழே இறங்கி வராவிட்டால் இறக்கவேண்டிவரும். சுமார் 200 மைல் உயரம் வரையில் வாயு இருக்கின்றது என்றும் ஆனால் அவ்விடங்களில் உள்ளகாற்று 'இல்லையென்றே' சொல்லக்கூடிய அளவு அவ்வளவு இலேசாய் இருக்கின்றதென்றும் சாஸ்திரப்பண்டிதர் அபிப்பிராயப்படுகின்றனர்.

காற்றின் அழுத்தத்தை சரிவர அளப்பதற்கு உபயோகப்படுத்தும் கருவியைப்பற்றிச் சொல்லுகிறேன். ஒருநாணல் குழாயை எடுத்துக்கொள்வோம்; அது இரண்டுபுறத்திலும் திறந்து இருக்கவேண்டியது. ஒரு கண்ணாடிக்குழாய் கிடைத்தால் மிகவும் விசேஷம். கடைசிபக்ஷம் ஒரு புல்குழாய் இருந்தாலும் போதும். அதன் ஒரு நுனியை ஜலத்தில்வைத்து மற்றொரு நுனியின் வழியாய்க்காற்றை உறிஞ்சினால் ஜலம் குழாயின் வழியாய் மேலே ஏறும். அதற்குக்காரணம் என்ன? நாம் குழாயின் உள்ளே இருக்கும் காற்றை உறிஞ்சவே காற்றுக் குறைந்துபோகிறது; அதன் அழுத்தமும் குறைந்து போகிறது. அப்பொழுது வெளியே இருக்கும் காற்றின் அழுத்தத்தால் ஜலம் மேலே தள்ளப்படுகின்றது. போனபாடத்தில் பாத்திரத்தின் வாயில் கட்டியுள்ள ரப்பர் எப்படி குழிந்துபோயிற்றோ அதேமாதிரி தான் ஜலமும் மேலே போகிறது. நாம் உறிஞ்சுவதை நிறுத்திவிட்டு முன்போலவே காற்றை உள்ளேவிட்டால் ஜலம் கீழேவிழுந்து விடுகின்றது. மேல்சொன்ன பரிக்ஷையை சற்று மாற்றிச்செய்வோம். நீளமான கண்ணாடிக்குழாயை எடுத்து—2, 3, அடி நீளம் இருக்கலாம்—அதன் ஒரு புறத்தை நல்ல தேன்மெழுகால் அடைத்துவிட்டு அதைத் தண்ணீரால் நிரப்பலாம். நிரப்பிய பிறகு ஜாக்கிரதையாய் அதைத் தலைகீழாய் பிடித்தால் ஜலம் கீழே விழாது. கண்ணாடிக்குழாய் இல்லாவிட்டால் நாணல் குழாயையே ஜலத்தில் வைத்து சிறிது ஆழம் போனபின்பு மேற்புறத்தைக் கட்டைவிரலால் மூடிக்கொண்டு குழாயை வெளியே எடுத்தால் ஜலம் குழாயில் நிற்பதையும், சொட்டு சொட்

டாய் விழுவதையும், கட்டைவிரலை எடுத்து விட்டால் எல்லா ஜலமும் விழுந்து விடுவதையும் பார்க்கலாம். இவ்விதமான பரிசைகூகள் செய்து தான் வாயுவின் அழுத்தம் எவ்வளவென்று சரியாய் நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். ஆனால் ஜலத்தை உபயோகித்து பரிசைகூசெய்வது கஷ்டம். அதற்குக் காரணம் சிக்கிரம் உங்களுக்கே விளங்கும். சுமார் 3 அடி நீளமுள்ள ஒரு கண்ணாடிக்குழாயை எடுத்துக்கொண்டு ஒரு புறத்தை உருக்கி துவாரத்தை அடைத்துவிட்டு அதை பாதரசத்தால் நிரப்பிக்கொள்வோம். ஒரு கிண்ணத்திலும் பாதரசத்தை எடுத்துக்கொள்வோம்.

முன் ஜலம் நிரம்பிய குழாயைச் செய்ததுபோலவே இதையும் ஜாக்கிரதையாய் கட்டை விரலால் அழுத்தி மூடிக்கொண்டு பாதரசம் உள்ள கிண்ணத்தில் கவிழ்க்கலாம். குழாய் முழுவதும் பாதரசம் இருக்கின்றதல்லவா ? நாம் இப்பொழுது தானே நிரப்பினோம் ? நான் கட்டை விரலை எடுத்து விடுகிறேன் பாருங்கள் ! ! என்ன விந்தை ! ! கொஞ்சம் பாதரசம் விழுந்து விட்டது; ஆனல் முழுவதும் விழவில்லை. இது ஏன் ? நான் ஒரு வேளை காற்றை உள்ளே நுழையவிட்டு விட்டேனோ ? அப்படியில்லை; குழாயைச் சற்று சாய்க்கிறேன் பாருங்கள். என்ன பார்க்கிறீர்; பாதரசம் குழாய் முழுவதும் நிரம்பிக்கொள்ளுகின்றது; ஆகையால் நான் காற்றை உள்ளே விடவில்லையென்பது விளங்குகின்றது ! ! பின்னையேன் கொஞ்சபாகம் விழுந்துபோகின்றது? யோசிப்போம்; என் பக்கத்தில் இருக்கும் இச்சிறிய குழாயை எடுத்துக் கொள்வோம். இதன் உயரம் சுமார் 28 அங்குலம். இந்த ஒரு வித்தியாசத்தைத் தவிர மற்ற வித்தியாசமில்லை. இதை முன்போலவே ரசத்தால் நிரப்பிக்கிண்ணத்தில் கவிழ்ப்போம். இப்பொழுது என்ன நிகழ்கின்றது? கொஞ்சம்கூட ரசம் கீழே விழுவதில்லை ! ! ஏன் ? நீண்ட குழாயில் நிற்கும் ரசத்தின் உயரத்தை அளப்போம்; சுமார் 29-30 அங்குலம் இருக்கின்றது? சற்று சாய்ப்போம். இப்பொழுது அதிக ரசம் குழாயில் நுழைந்து இருந்தபோதிலும் நேர்மட்டமாய் எவ்வளவு உயரம் என்று பாருங்கள். இப்பொழுதும் அதே உயரம் தானே ! ! எந்தப் பக்கம் வேண்டுமானலும் சாய்த்துப் பாருங்கள். எல்லாச் சமயங்களிலும் 30 அங்குலம் உயரம் தான் நிற்கும். அதற்குமேல் போவதில்லை. அதிகமாய்ச் சாய்த்துவிட்டால் குழாய் முழுவதையும் நிரப்பிக்கொள்ளுகின்றது. இவற்றையெல்லாம் பார்த்து யோசிக்கும் கால் காற்று தாங்கக்கூடிய ரசம் சுமார் 30 அங்குலம் தான் என்பது உங்களுக்கு விளங்கும். குழாயின் உயரம் 30 அங்குலத்துக்கு உள்பட்டு இருந்தால் குழாய் முழுவதும் நிரம்பி யிருக்கும். 30 அங்குலத்திற்கு மேல்பட்டு இருந்தால் அந்த இடத்தை நிரப்பிக்கொள்வது இல்லை. அவ்விடம் காலியாய் நின்று விடுகின்றது. 'காலி' என்றால் அவ்விடம் முற்றிலும் 'காலி' தான். காற்று என்ற பேச்சே அவ்விடத்தில் கிடையாது.

காற்றின் அழுத்தம் இவ்வளவு என்று சரியாய் அளக்கக்கூடிய இவ்வருமைக் கருவிக்கு பரோமிடர் (Barometer) என்று பெயர்.

இந்த நயமான கருவியால் காற்றின் அழுத்தம் ஒவ்வொரு இடத்திலும் எவ்வளவு என்று சுலபமாய் அறிந்துகொள்ளலாம். இக்கருவியை சமுத்திரக் கரையினின்று ஒரு உயரமான இடத்திற்குக் கொண்டுபோனல் அவ்விடத்தி

லும் 30 அங்குலம் ரசம் நிற்பதில்லை. அங்கே குறைந்து போகின்றது. மேலே போகப்போக பேரோமிடரில் உள்ள ரசத்தின் உயரம் குறைந்துகொண்டே வரும். சமுத்திரக்கரையில் உள்ள சென்னைப்பட்டிணத்தில் பேரோமிடர் 30 அங்குலம் உயரமிருக்கும்; சுமார் 4000 அடி உயரமுள்ள—மலையில் 4 அங்குலம் குறைவாய் இருக்கும். 6000 அடி உயரம் உள்ள உதகமண்டலத்தில் இன்னும் குறைவாக இருக்கின்றது. ஒவ்வொரு பெரிய பள்ளிக்கூடத்திலும் இப்பொழுது ஒரு பரோமிடர் இருக்கும். வேண்டுமானால், நீர் நேரே போய் பார்த்து அதன் விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

சாதரணமாய்க் காற்றின் அழுத்தத்தை 'இவ்வளவு அங்குலம் பாதரசம்' என்று தான் கணக்கிடுவது வழக்கம். உதாரணமாக இன்று காற்றின் அழுத்தம் 29 அங்குலம் என்றால் ஒரு சதுர அங்குலத்தின்மேல் 29 அங்குலம் உயரம் நிற்கக்கூடிய ரசத்தின் அழுத்தமும், அதே ஒரு சதுர அங்குலத்தின்மேல் அன்றையதினம் காற்று அழுத்துகின்ற அழுத்தமும் சரி என்று பொருள். ஒவ்வொரு வஸ்துவின் கனத்தையும் அளப்பதற்குத்தராசு எவ்வளவு நயமாக உபயோகப்படுகிறதோ அவ்வளவு நயமாய் காற்றின் அழுத்தத்தை பரோமிடர் நிர்ணயம் செய்கின்றது.

ரசத்திற்குப் பதிலாய் மற்ற திரவபதார்த்தங்களை உபயோகப்படுத்தக் கூடாதா என்று கேட்டால், அப்படிச்செய்வதில் பல கஷ்டங்கள் உண்டு. ஜலத்தை எடுத்துக்கொள்வோம். ஜலம் ரசத்தைவிட இலேசான பொருள் என்பது உங்களுக்கே தெரிந்த விஷயம். 30 அங்குலம் ரசத்தைத்தாங்கும் காற்று அதிக ஜலத்தைத் தாங்குமென்பதற்குத் தடை என்ன? ஜலம் ரசத்தைவிட 13½-மடங்கு பொருள் நெருக்கம் குறைவானபடியால் ஜலத்தை 34 அடி உயரம் வரையில் காற்று தாங்கும். ஆகையால் 3 அடிக்குழாயில் தண்ணீர் ஊற்றி ஜலத்தில் கவிழ்த்தால் ஜலம் கீழே விழுவது இல்லை.

காற்றின் அழுத்தத்தின் காரணத்தால் வேலைசெய்யும் பல கருவிகள் இருக்கின்றன. அவற்றுள் சில கருவிகளை நீங்கள் பார்த்து இருக்கலாம். டாக்டர் உபயோகப்படுத்தும் பீச்சாங்குழல் ஒன்று. அதைபபலரும் பார்த்து இருக்கலாம். அதன் கண்ணாடிக்குழாயும், அடைப்பானும், அதை மேலும் கீழும் தள்ளப் பிடியும் இருக்கின்றன பாருங்கள். ஒரு முனையை ஜலத்தில் வைத்து அடைப்பானை மேலே இழுத்தால் உள்ளே இருக்கும் காற்றை அடைப்பான் உறிஞ்சி விடுவதுபற்றி வெளியே உள்ள காற்றின் அழுத்தத்தால் ஜலம் குழாயுள் ஏறுகின்றது. அதை எடுத்து மறுபடி அடைப்பானைக் கீழே தள்ளினால் ஜலம் அழுத்தப்படுவதினால் வேகமாய் வெளியே போகிறது.

பீச்சாங்குழல்.

கிரோஸின் எண்ணெய் இறைக்கும் பம்பு; (Pump) இதற்கும், பீச்சாங்குழலுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. நுனியில் ஒரு வழி இருக்கின்றது;

அதன் கதவு தோலினாலேயோ அல்லது மெல்லிய தகட்டினாலேயோ செய்யப்பட்டு இருக்கும். அவ்வழி கிரோவின் எண்ணெயை மேலே போக தாராளமாய் வழிவிடும். கீழேபோகாமல் தடுக்கும்; ஆகையால் அடைப்பானை மேலே இழுத்தால் வழியைத் திறந்துகொண்டு எண்ணெ உள்ளே வரும். மறுபடி அமுக்தினால் கீழேபோக வழியில்லாமல் அடைப்பானுக்கு மேலே வந்துவிடுகிறது; மறுபடி அடைப்பானை மேலே தூக்கும்போது எண்ணெயும் மேலே தூக்கப்படுகின்றது. இம்மாதிரி பலமுறை இறைக்க எண்ணெய் அள்ளையில் வைத்து இருக்கும் சிறுகுழாய் வழியாய் வழிந்து போகின்றது.

எண்ணெய் இறைக்கும் யந்திரம்.

சாதாரண உவாடர் பம்பு (Water Pump) என்பது மேற்சொன்ன கருவியின் சற்று மாறியிருக்கும். அடைப்பான் குழாயில் காற்று நுழையாதபடி 'டைட்டாய்' கெட்டியாய் இருக்கும். அடைப்பானிலும் ஒரு கதவு உண்டு. அதுவும் மேல்நோக்கியேதிறக்கும். ஜலத்தைக் கீழே போகவிடாது. வேலைசெய்யும் முறை முன்சொன்ன கருவி போலவேதான். இன்னும் மற்ற பம்புகளையும் நீர் பரிசைக்ஷ செய்யும் காலத்தில் அவற்றின் வேலைசெய்யும் முறைமை நன்கு விளங்கும். பம்புகளைப்பற்றிப பேசும்போதே, பிள்ளைகள் பந்து விளையாடும் காலத்தில் உபயோகப்படுத்தும் 'Inflater' என்னும் காற்றடைக்கும் கருவியைப்பற்றிச் சொல்லி முடித்துவிடுகிறேன். Inflater-ஐப் பிரித்துப்பார்த்தால் உள்ளே இருக்கும் அடைப்பான் தோலினால் செய்யப்பட்டு இருப்பது விளங்கும். அத்தோல் எப்புறம் வளைந்து இருக்கின்றதுஎன்பதை கவனிக்கவேண்டும். நுனிப்புறம் நோக்கிதான் வளைந்து இருக்கும். நுனியில் உள்ள சிறுகுழாயை எடுத்துப்பார்த்தால் அதன் அடியில் ஒருசிறுவழி இருக்கும். அதுவும் ஒரு தோலினாலாவது ரப்பரினாலாவது மூடப்பட்டு இருக்கும். அது வெளியே மட்டும் திறக்குமே வொழிய உட்புறம் போகக் காற்றைவிடாது. மறுபடி எல்லாப் பாகங்களைப்போட்டு திருகிவிட்டு பிடியை வெளியே இழுத்தால் உட்புறம் அழுத்தம் குறைகின்றது. ஆகையால் வெளியேஉள்ள காற்று அடைப்பானைச் சற்று நெருக்கிக்கொண்டு உட்புகும். உள்ளே அடைப்பானைத் தள்ளினால் அங்கிருக்கும் காற்று அமுத்தப்படுவதினால் தோலைத் தாக்கும். தோல் விரியும்போது குழாயைச் சுற்றிலும் பலமாய் அமுத்திக்கொள்ளுகிறது. ஆகையால் காற்று நுனியில் உள்ள கதவைத் திறந்துகொண்டு வெளிப்புறப்படும்; ஆகவே ஒவ்வொரு தடவையும் நாம் அடைப்பானை உள்ளே தள்ளும்போது காற்று வெளிப்புறப்படுகின்றது. வெளியே இழுக்கும்போது வெளிக்காற்று அடைப்பானை நெருக்கிக்கொண்டு உட்செல்லும். இம்மாதிரியே பலமுறை இழுக்க அதிகமாய்க் காற்றை ரப்பர் பந்தில் நிரப்பலாம்.

உவாடர் பம்பு.

பைஸகில் பம்பும், ஸ்டவ் (Stove) என்று சொல்லுகிற அடுப்புகளுக்கு வைத்து இருக்கும் பம்புகளும் — மேல்சொன்ன (Inflater) போன்றவைகள்தான்.

பைஸகில் பம்பு.

ஆர். கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.

நமது துண்டுப் புஸ்தகம்.

ஸ்வீடன் ராணியார் ஸ்டாக்ஹோம் என்றபட்டணத்தில் தமது அரமனை யின் மாடியில் ஒருதோட்டம் ஏற்படுத்தியிருக்கிறாராம். இதில் தாமே வேலை செய்வது இராணியாருக்குப் பிரியமாம்.

மேடம்கரிஎன்றமாது Rādium (ரேடியம்)கண்டுபிடிப்பதில் முதன்மை யானவர். ஒருமாதும் இவ்வளவு சிரமப்பட்டு சாஸ்திர ஆராய்ச்சியில் பேர் பெற்றதில்லை.

சர்ஹரோல்ட் ஹார்ம்ஸ்வொர்த் என்ற கனவான் கேம்பிரிட்ஜ் என்ற கலாசாலைக்கு 20,000 பவுன் இனமளித்திருக்கிறார்.

மிஸ்டர் சீசல் ஹார்ம்ஸ்வொர்த் என்ற கனவான் மியூசியத்திற்காக பொதுஜனங்கள் நன்மையடையுமாறு ஒருபெரிய கட்டடத்தை இங்கிலாந் தில் விலைக்குவாங்கி அளித்திருக்கிறாராம்.

நமது சக்ரவர்த்தி தமது தகப்பனரைப்போல் உயர்ந்த ஆடைகளை த்தரிப்பதில்லை. ஆயினும் வீட்டிலிருக்கும்போது தரித்துக்கொள்ளவும், வெளியிற் வேட்டையாடச்சென்றால் அதற்குவேண்டிய உடுப்பும், நாட்டுப் புரங்களுக்குச் செல்லுகையில் அதற்குவேண்டிய உடுப்பும், இருக்கின்றன.

இவரே தமது உடுப்புக்குவேண்டிய துணிகளை வாங்குகிறாராம். கைத் தரியால் வீட்டிலேயே செய்யும் துணிகளைவாங்கி அவ்விதம் துணி நெய் பவர்களுக்கு உதவிபுரிந்து வருகிறாராம். இவருக்கு கப்பல் யுத்தம் முதலிய வைகளில் அதிகப் பயிற்சியிருக்கின்றமையால் இவைகளுக்கு வேண்டிய உடுப்பு எல்லா அரசர்களைவிட அதிகமாயிருக்கின்றனவாம். ஆனல் ஜர்மன் சக்ரவர்த்திக்கு மாத்திரம் நமது சக்ரவர்த்திக்கு எவ்வளவு விதம் விதமான உடுப்புகளிருக்கின்றதோ அவ்வள விருக்கின்றனவாம். மேலும் நமது சக்ர வர்த்தி கௌரவகர்னலாக நமது (சைனியத்தில்) யிருப்பதுடன் இதர இரா ஜ்யத்திலும் இவரை அவ்விதம் நியமித்திருக்கிறார்கள்.

க்ளாட்ஸ்டன் மந்திரியாயிருந்தபொழுது தினம் இரண்டுமணி நேரம் நடக்காமலிருக்கவில்லை. இவருக்கு அதிகவேலை யிருந்தபொழுதும் 2-மணி நேரம் நடந்துவந்தாராம். உதாரணமாக தினம் 14-மணி அல்லது 16-மணி நேரம் வேலை செய்யவேண்டி யிருந்தபோதும் தினம் 2-மணி நேரம் நடப்ப தில் காலத்தைக் கழித்தாராம். காற்று யிருந்தாலும் சரி, சாதாரண மழை யிருந்தாலும் சரி, வாட்டர் ப்ரூப் என்ற ஒருவித துணியைமேல் தரித்துக் கொண்டு நடப்பாராம்; பகலில் நடக்கமுடியாவிடின் இரவில் நடப்பாராம்.

புதிய துர்க்கி பெண்கல்வி விஷயத்தில் விருத்தியடைந்து வருகிறது. சுல்டான் அவர்கள் கண்டிலி என்ற ஊரில் ஒருபாடசாலை ஏற்படுத்த அங் குள்ள தமது அரமனையைக் கொடுத்திருக்கிறாராம். துர்க்கிபாஷையில் எல்லாப்பாடங்களும் போதிக்கப்படுமாம். சாஸ்திரப்பாடம் இதரதேசத்து ஸ்திரீகளால் போதிக்கப்படுமாம்.

உபாத்தியாயர்களெல்லாம் துர்க்கிதேசத்து ஸ்திரீகளாம். இவர்கள் கவர்ன்மெண்ட் செலவில் தக்க பிரன்சு இங்கிலீஷ் அமெரிக்காதேசத்து மாதர்களால் போதிக்கப்பட்டவர்களாம். ஒருபெரிய குடும்பத்தைச்சேர்ந்த துர்க்கிதேசத்து மாது "மகமதிய ஸ்திரீகள் எவ்வளவு விருத்தியை யடையலாமோ அவ்வளவையும் அடையட்டுமென்றும், சாஸ்திர ஆராய்ச்சி ஒவ்வொரு மனிதனுக்கும் ஸ்திரீக்கும் முக்கிய கடமையென்றும் சொல்லு கிறதாக" ஆங்கிலப்பத்திரிகையில்எழுதியிருப்பதைக்கேட்க அதிகச்சந்தோஷ படுகிறோம்.

———

விக்டோரியாவுக்கு கவர்னராயுள்ள சர்தாமஸ் டேவிஸ் ஜிப்ஸன் கார்மை கேல் அவர்கள் நமக்கு இப்பொழுதுள்ள கவர்னருக்குப்பின் கவர்னராக நிய மிக்கப்பட்டிருக்கிறார். இம்மாதம் 7-ம்தேதியன்று இலங்கைக்கு தமது மனை வியுடனும், புத்திரியுடனும் சென்று, அங்குள்ள கவர்னரால் வரவேற்கப் பட்டு அவருடன் விருந்துண்டு மறுநாள் லண்டன்மாநகருக்குச் சென்றார் களாம். இவர் லீவிலிருப்பதால் சுற்றுப்பிரயாணம் செய்தாராம்.

———

திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கோட்டயம் டிவிஷன் திவான் பேஷ்கார் மிஸ்டர் பி. ராமகிருஷ்ணய்யரின் மனைவி ஸ்ரீமதி அபயாம்பாள் அம்மாள் இந்த வருஷத்து மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறியிருப்ப தாய்த் தெரிந்து சந்தோஷிக்கிறோம். இதுவரை அந்த சமஸ்தானத்தில் பிராமண ஸ்திரீகள் அந்த பரீட்சையில் தேறினதில்லை. ஸ்ரீமதி அபயாம் பாள் காலஞ்சென்றுவிட்ட திவான் பேஷ்கார் ரத்தினசாமி அய்யருக்குக் கிட்டிய பந்துவென்று காண்கிறது.

———

சில மாதங்களுக்கு முன் நடந்த ஐக்கிய மாகாணப் பொருட்காட்சியை யொட்டி, செயிக்வார் ராணியாகிய சரத்குன்வார் ரூபா 500 பெறும்படியான ஒரு பரிசு கொடுப்பதாகச் சென்ற டிசம்பர் மாதத்தில் விளம்பரப்படுத்தி யிருந்தார். "ஐக்கிய மாகாணங்களின் தொழில் விருத்திக்கு அனுகுணமாகக் கீழ்க்கடையில் நடந்த பொருட் காட்சியினின்று காரியத்தில் பெறக்கூடிய பயன்களும் படிப்பினைகளும்" என்கிற விஷயத்தைப் பற்றி ஹிந்தி அல்லது உருது பாஷையில் சிறந்த வியாசமொன்று எழுதி அனுப்புகிறவருக்கு இந் தப் பரிசு கொடுப்பதாக அறிவிக்கப்பட் டிருந்தது. லக்நௌவில் பண்டிட் மார்க்கண்டேய பிரசாத்பத்த சார்ஜியின் மனைவியாகிய ஸ்ரீமதி குமாரிதேவி ஹிந்தியில் ஒரு வியாசமெழுதி இப்பரிசு பெற்றாரென்று தெரிகிறது. தொழில் விருத்தி விஷயத்தில் எல்லோரிலும் மேலான யோசனை சொல்லக் கூடியவராய் ஒரு ஹிந்து மாது இருக்கிறாரென்று ஒருவரும் எதிர்பார்த் திருக்க முடியாது என்று வியந்து "பயனீயர்" பத்திரிகை களிகூர்கிறது.

———

அமெரிக்கா தேசத்திலிருந்து மிஸ்டர் மைரன்பெல்ப்ஸ் சென்னையில் தங்கி இந்தியர்களுடன் பழகிவருகிறார். இவர் அநேக கடிதங்கள் இந்து பத் திரிகைக்கு எழுதியிருக்கிறார். நமது தேசாபிமானிகளுக்கு ஒரு வேண்டு கோள் பின்வருமாறு ஒரு கடிதத்தில் செய்துகொள்கிறார் :—

"விவாகம் முதலிய சமயங்களிலும் வீண்செலவுகள் ஆகின்றன. கோவி ல்களைப் புதுப்பிப்பதிலும உற்சவங்களை நடத்துவதிலும் ஹிந்துக்கள் எவ்

வளவோ பணத்தைச் செலவு செய்கிறார்கள். இவர்கள் காஞ்சீபுரம் பெண் பாடசாலைக்கு வேண்டிய பணவுதவி செய்யாமல் அக்கறைக் குறைவாயிருப்பது ஆச்சரியமே. படிப்பு, பெண்மை, யோக்கியதை, மூன்றையும் கற்றுக் கொடுக்கும் இந்த ஸ்கூலுக்குத் தகுந்த உதவிசெய்து இத்தகைய ஸ்கூல்கள் தேசத்தில் பல விடங்களில் ஸ்தாபிக்கப்படும்படிச் செய்யாவிட்டால் மற்ற தர்மங்களால் தேசத்துக்கு நன்மை எப்படி யுண்டாகும்? ஜனங்களின் க்ஷேமம் பெண்களின் சுபாவத்தைப் பற்றினதா யிருக்கின்றது. பெண்கள் படிப்பு, பெண்மை, யோக்கியதை இந்த மூன்று குணங்களையும் பெற்று, ஹிந்துக் குடும்பங்களின் மேலான சுபாவத்தைக் காப்பாற்றி, ஆண்மக்கள் தேச நன்மைக்காகச் செய்யுங் காரியங்களில் உதவி செய்யாவிட்டால், இந்து ஜனங்கள் உலகத்தில் பெருமையை யடையமாட்டார்கள். பெண்கள் அறியாமையால் வருந்துவது தேசத்தின் நாசத்துக்குக் காரணமாகும். இந்தியா தேசம் இப்போது வருந்துவது வறுமையால் அல்ல; தேசாபிமான மின்மையால் வருந்துகின்றது. தேசாபிமானம் மேல் நாடுகளில் மேம்பாடு பெற்றுப் பொது நன்மையை முற்படுத்துவதுபோல இந்தியாவும் மேம்பாடுபெற்று முற்படுத்தாவிட்டால் இந்த தேசம் வரவர கீழ் நோக்குற்று நசிந்துபோவது நிச்சயம்."

———

சென்னைக் கவர்ன்மெண்டாருக்கு வட சர்க்கார் என்று சொல்லப்படுகிற கெஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணா இந்த ஜில்லா வாசிகள் போன ஜனவரி மாதத்தில் ஹிந்து ஸ்திரீகளின கல்வி சம்பந்தமாய் ஒரு விண்ணப்பம் அனுப்பி யிருந்தார்கள். அந்த விண்ணப்பத்தின்மேல் அடியிற் கண்டபடி கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித் திருக்கிறார்களென்று பர்ஹாம்பூர் மிஸ்டர் R. குண்ணய்யாசாஸ்திரி மெயில் பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். "அங்கீகரிக்கப்பட்ட மாதர் சங்கங்களால் ஸ்திரீ உபாதியாயர்களுக்கு கொடுக்கப்பட்ட யோக்கியதா பத்திரங்களைச் சரியென்று ஒப்புக்கொள்ள கவர்ன்மெண்டாருக்கு யாதொரு ஆட்சேபமுமில்லை. விண்ணப்பத்தில் கண்ட மற்ற விஷயங்கள மாகாண வித்தியாதி காரியால் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. அவருடைய பிரேரணைகள் கவர்ன்மெண்டுக்கு வந்து சேர்ந்ததும் அவைகளைபபற்றிக் கவர்ன்மெண்டார் யோசிப்பார்கள்."

———

ஜார்ஜ் சக்கரவர்த்தி கல்கட்டாவுக்கு விஜயம் செய்யும் சமயத்தில் தங்கள் ராஜவிசுவாசத்தைக் காட்ட என்ன செய்கிறதென்று கல்கட்டா காளி கோயில் குருக்கள் மார்கள் சில தினங்களுக்கு முன்னே மீட்டிங் கூடி ஆலோசனை செய்ததில் கையொப்பங்கள் சேர்த்து அக் கையொப்பங்கள் மூலமாய் வசூலாகுந் தொகையைக் கொண்டு ஏழைகளுக்குக் கஞ்சி வார்ப்பதைவிடச் சிறந்தவழி வேறொன்று மில்லையென்று தீர்மானித்ததாகத் தெரிகிறது.

———

இப்போதைய வேல்ஸ் இளவரசர் சரியானபடி யூனிவர்ஸிடிப் படிப்புப் பெறுவாரென்று சொல்லப்படுகிறது. அவ்விளவரசர் காலஞ்சென்றுவிட்ட எட்வர்ட் சக்கிரவர்த்தியைப் போலவே ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடியிலும் கேம்பிரிட்ஜ் யூனிவர்ஸிடியிலும் நிரந்தரமாய் வசித்து உயர்தரப் படிப்பை பூர்ணமாய்ப் படிப்பாராம். ஜார்ஜ் சக்கரவர்த்தியார் இளவரசரா யிருந்தபோது ஆக்ஸ்போர்டு கேம்ப்ரிட்ஜ் யூனிவர்சிடிகளுக்குப் போய் நிரந்தரமாய் வசித்து உயர்தரப்படிப்புப் படித்ததில்லையாம்.

மகுடாபிஷேக சமாச்சாரம்.

வேல்ஸ் இளவரசர், தம் சகோதரியார் சகிதமும், பிரின்ஸ் ஜியார்ஜ் சகிதமும் செல்ஸீ என்னுமிடத்துக்குச் சென்று அங்குள்ள குடியேற்ற நாட்டுச் சைனியங்களைப் பார்வையிட்டார்.

இங்கிலாந்துக்கு வந்திருக்கும் இந்தியர்களை லார்டுக்ரூ வரவேற்றினார்கள். இந்திய மன்னர்கள் தங்கள் சுதேச உடுப்புகளுடன் அவரைக்காண சென்றார்கள்.

சீனதேசத்து இளவரசும் அவரது பரிவாரமும் பேர்சியாதேசத்து கனவான்களும் லண்டன்மாநகருக்கு வந்திருக்கிறார்கள். ஈதர் மகாராஜா வந்துவிட்டார். மரியாதை செய்ய ஜப்பான் யுத்த கப்பல் வந்துவிட்டது.

லண்டனிலும், விண்ட்ஸரிலும் முடிசூட்டு வைபவம் நடக்கும்போது ஆறு தினங்களுக்கு ஆகாயவிமானம் விடக்கூடாதென்று மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

லண்டன், ஜூன்மீ 12௳ இந்தியச் சைனியங்கள் லண்டனிலுள்ள முக்கிய ஸ்தானங்களைப் பார்வையிடச் சென்றன. காமன்ஸ்சபை, நாஷனல் காலரி, மற்றும் சில ஸ்தாபனங்கள் இவைகளைப் பார்வையிட்டன.

ஜூலைமீ 7௳ ஜியார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும், வேல்ஸ் இளவரசர் பிரின்ஸஸ் மேரி முதலானவர்களுடன் புறப்பட்டு அயர்லாந்துக்குச் செல்வார்கள். கானாட்டுக்கோமகனும் உடன் செல்வார்.

முடிசூட்டு வைபவம் நடந்தபோது பொதுஜனங்கள் காட்டிய அன்பையும் உபசாரத்தையும் ஜியார்ஜ் சக்கரவர்த்தியும் மேரி சக்கரவர்த்தினியும் மனமுவந்து ஏற்றுச் சிலாகித்ததாக உத்தியோக முறையில் வெளியிடப்படுகிறது.

மகுடாபிஷேக காலத்தில் ஊர்கோலம் நடக்கும். அது சரியாயிருக்குமாவென்றறிய ஒரு ஊர்கோலம் ஆபேக்குச்சென்றது. இதை அநேகர் பார்த்து களித்தார்கள். அபேயிக்குள் மகுடம் தரிக்கும் சடங்கையும் செய்து பார்த்தார்களாம்.

விண்ட்ஸரிலிருந்து ஜியார்ஜ் சக்கரவர்த்தியும் மேரி சக்கரவர்த்தினியும் பக்கிங்ஹாம், அரண்மனைக்குத் திரும்பியபோது லண்டனில் அவர்களுக்கு முடிசூட்டு வைபவத்தை முன்னிட்டு, ஒரு விசேஷ உபசாரம் செய்யப்பட்டது.

இன்று பிற்பகலில் சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் லார்டு கிச்சனருக்கு அவர் முடிசூட்டு வைபவத்தின்போதுசெய்திருந்த ஒழுங்கான ஏற்பாடுகளுக்காக வந்தனஞ் செலுத்தியதோடு சைனியங்களுக்கும் தங்கள் வந்தனோபசாரத்தை அறிவித்தார்கள்.

லண்டன், ஜூன்மீ 13௳ இண்டர் நாஷனல் பெண் சுதந்தரவாதிகளின் முதற்காங்கிரஸ் ஸ்டாக்ஹாம் என்னுமிடத்தில் முதல் முதல் இன்று

கூடிற்று. ஐரோப்பா அமெரிக்கா ஐக்கிய நாடு, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலான இடங்களிலிருந்து ஆயிரங் கணக்கான டெலிகேட்டுகள் வந்திருக்கிறார்கள்.

———

குடியேற்ற நாட்டுச் சைனியங்களுக்கு ஜூன்மீ 19உயன்று லண்டனில் க்ரிஸ்டல் அரண்மனையில் ஒரு விருந்து வைத்து உபசரிக்கப்பட்டது. ஏகாதிபத்தியச் சைனியங்கள் செய்திருக்கும் வேலைகளைப்பற்றியும், ஏகாதிபத்தியப் பாதுகாப்புக் கமிட்டியார் செய்திருக்கும் வேலைகளைப்பற்றியும் லார்டு ஹால்டேன் பேசினர்.

———

இன்று ஜியார்ஜ் சக்கரவர்த்தி இந்தியச் சைனியங்களுக்கும் குடியேற்ற நாட்டுச் சைனியங்களுக்கும் பக்கிங்ஹாம் அரண்மனையில் மெடல்கள் பரிசளித்தார். சக்கரவர்த்தியார், லார்ட்டு கிச்சனர் வேல்ஸ் இளவரசர், கானட்டுக் கோமகன், லார்டு ராபர்ட்ஸ் முதலானவர்களுடன், பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் சென்றவுடன், அங்கே பரிசளிப்பு நடந்தது. இதற்கு முன்பே இந்திய மன்னர்களைக்கண்டு அவர்களுக்கு மெடல்கள அளித்துவிட்டார்கள்.

———

ஜியார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும் சாயந்திரம் டௌனிங் தெருவில் மிஸ்டர் ஆஸ்க்வித்தின் விருந்தினராய் இருந்தார்கள். மந்திராலோசனை சபையைச் சேர்ந்த அனேகர் விருந்துச்கு வந்திருந்தார்கள். லார்டு லாண்ட்ஸ் டௌன், லேடி லாண்ட்ஸ் டௌன், லார்டு கர்ஸன், மிஸ்டர் பால்பர், கவுண்டஸ் மிண்டோ முதலானவர்கள் வந்திருந்தவர்களுள் முக்கியஸ்தர்கள்.

———

பெண் சுதந்தரவாதிகள் எல்லோரும் சேர்ந்து முடிசூட்டு ஊர்வலமென்று ஒரு ஊர்வலம் விட்டுக்கொண்டு அல்பர்ட் ஹாலுக்குச் சென்றார்கள். தேச சரித்திரத்தில் இடம்பெறக் கூடியவையான வீரச்செயல்களை ஸ்திரீகளும் செய்திருக்கிறார்கள் என்னும் உண்மைக்கு ஒரு அறிகுறியாக இந்த ஊர்வலம் விடப்பட்டதாம். மிஸஸ் பிஷர், மிஸஸ் மாகோவான், லேடி பிராஸி முதலானவர்களும் இந்த ஊர்வலத்தில் முக்கியஸ்தர்களா யிருந்தது கவனிக்கத் தக்கது.

———

பிகானிர் மகாராஜா கேம்பிரிட்ஜ் யூனிவர் ஸிடியைப்போய்ப் பார்வையிட்டார். ராஜ புத்திரர்கள் எழுதுவதையும் பேசுவதையும்விட, யுத்த சம்பந்தமான விஷயங்களிலே தங்கள் விருப்பத்தைச் செலுத்தும் இயல்புடையவர்களென்றும், ஆனாலும் இந்திய மன்னர்களுக்கு இந்த யூனிவர் ஸிடியார் செய்த மரியாதையைத் தாம் அன்புடன் ஏற்றுக்கொள்ளுவதாயும் சொன்னார். நம்முடைய ஜனங்களின் கல்வி, க்ஷேமம் இவைகளைப்பற்றிய சம்பந்தம் நமது இருதயத்தை ஒட்டியே இருக்கிறது என்று பிகானிர் மகாராஜா சொன்னார்.

———

மகுடாபிஷேகத்திற்காக ரோடுகளெல்லாம் சுத்தம் செய்யப்பட்டும் அலங்காரமான வளைவுபோன்றவைகளும் தோரணங்களும் கட்டப்பட்டு வருகின்றன. ஜனங்கள் போகவும் திரும்பி வரவும் வெவ்வேறு வழியுண்டாம். எந்தெந்த தெருக்களிலும் பாலங்களிலும் அன்றையதினம் வண்டி முதலியவைகள் போகக்கூடாதென்பதைக் குறிக்க ஒரு அறிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இது அநேகமாக அன்றுவிடியற்காலம் 4-மணிமுதல் நடக்குமாம். இடம்வேண்டியவர்கள் அதிகப்பணம் கொடுத்து டிக்கட்டு வாங்குகிறார்களாம். 23உ மன்னர்கள் உகினிகொடுக்கவேண்டுமாம்.

மேரி என்ற நாமமுடைய மாதர்களும், பெண்களும் சேர்ந்து கையொப்பம் சேர்த்து ஜூன்மீ 8வயன்று சக்ரவர்த்தி, பிரின்ஸ் ஆப்வேல்ஸ் இவர்களுடைய படங்களுடன் வைரமிழைத்த பெட்டியுடனும் 13,700 பவன் செக்கும் அனுப்பினார்களாம். மேரி ராணியார் இவ்வித வெகுமதியைப்பெற்று மகிழ்ந்து அவர்களுக்கு வந்தனமளித்து பின்வருமாறு பதில் அளித்தார்களாம். "இவ்விதம் அவர்கள் அன்புடன் செய்ததானது தமக்கு அதிகதிருப்தியைக் கொடுக்கிறதென்றும், அதை ஞாபகார்த்தமாக வெகு ஜாக்கிரதையாதை வைத்திருப்பார்களென்றும், 13,700 பவுனையும் தர்மவிஷயமாக செலவழிக்க தமது முக்கிய கருத்தென்றும்" கூறியிருக்கிறார்கள்.

ஜூன்மீ 29வ செயிண்ட்பால் ஆலயத்தில் வந்தனோபசாரத்தின் நிமித்தம் நடைபெற்ற ஆராதனைக்கு ஜியார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும் விஜயம் செய்துவிட்டு, அதன் பிறகு ஸ்தல நிர்வாக அதிகாரிகளின் உபசாரத்தைப் பெறுவதற்காக கில்டு ஹாலுக்குச் சென்றார்கள். இளவெயில் காய்ந்தது. அவர்கள் செல்லும் வழிகளில் ஜனங்கள் கும்பல் கும்பலாய்க் கூடி யிருந்தார்கள். பீரங்கி வெடிகள் முழங்க ஜனங்கள் கரகோஷம் செய்ய, சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் பக்கிங்ஹாம் அரண்மனையை விட்டுப் புறப்பட்டார்கள். சக்கரவர்த்தியின் மெய்காப்பாளர், எய்-டீ-காங் முதலானவர்களுடைய மூன்று வண்டிகள் சக்கரவர்த்தியின் ஆறு குதிரை பூட்டிய வண்டியுடன் முன்சென்றன. அந்த வண்டியில் சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி, பிரின்ஸஸ்மேரி வேல்ஸ் இளவரசர் முதலானவர்கள் இருந்தார்கள். லார்டு கிச்சனர் அவ்வண்டியின் பின்சென்றார். முதலில் ஆலயத்துக்குச் சென்றுவிட்டு அதன்பிறகு கில்ட்ஹாலில் சென்று கார்ப்பொரேஷனாரின் உபசாரத்தைப் பெற்றுத் திரும்பினார்கள்.

ஜூன்மீ 8வ இரவு 8 மணிக்கு ஜியார்ஜ் சக்கரவர்த்தியும் மேரி சக்கரவர்த்தினியும் ஹென்சிங்டன் ஹார்பர்வந்து சேர்ந்தார்கள். ஆயிரங்கணக்கான ஜனங்கள் துறைமுகத்தில் கூடியிருந்து சக்கரவர்த்தியின் வருகையைக்கண்டு, சந்தோஷத்தால் ஆரவாரித்தாகள். காலையில்தான் கப்பலைவிட்டிறங்கிக் கரைவந்து சக்கரவர்த்தி சேர்ந்தார், சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினி, வேல்ஸ் இளவரசர், பிரின்சஸ்மேரி, இந்நால்வரும் டப்ளின் காசிலுக்குச் சென்றார்கள். போகும் வழியெல்லாம் ஜனங்கள் மிக நெருக்கமாய்க் கூடியிருந்தார்கள். நாஷனலிஸ்டுக் கட்சியாரின் சச்சரவு காரணமாக டப்ளின் கார்போரேஷனால் சக்கரவர்த்திக்கு வரவேற்பு உபசாரம் செய்யப்படவில்லையாயினும் ஊர்ஜனங்களின் பிரதி நிதிகளாகிய பலகமிட்டியார் சக்கரவர்த்திக்கு அட்ரஸ் படித்தார்கள். ஜனங்களுடைய மனமகிழ்ந்த வரவேற்பைக் கண்டு ராஜதம்பதிகள் மிகச் சந்தோஷப்பட்டார்கள். டப்ளின் நகரம் மிக நன்றாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நாஷனலிஸ்டுப் பத்திரிகைகள் ஒரு வாறு சந்தோஷங் காட்டியே எழுதின.

டெல்லிதர்பார் விஷயம்.

ஜார்ஜ் சக்கரவர்த்தி விஜய காலத்தில் பம்பாயில் ஒரு பொருட்காட்சியும் இன்னும் சில்லறை தமாஷாக்களும் நடத்தப்படப் போகின்றன. அடுத்த நவம்பர் மாதம் முதல் அவைகள் நடைபெறும். அப்பொருட் காட்சிக் கூடம்

பம்பாய் எஸ்பிளேனேட் மைதானக்காலி நிலமுழுதிலும் பரவியிருக்குமெ ன்று சொல்லப்படுகிறபடியால் அப்பொருட்காட்சிப் பெரிதாயிருக்கவேண்டு மென்றே யூகிக்கவேண்டியதாயிருக்கிறது. ஜார்ஜ் சக்ரவர்த்தி மேரி ராணியா ருடன் பம்பாயில் தாமதிக்கும்போது பொருட்காட்சி கூடத்தின் வழியாய் சவாரி போவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹிஸ்ஹைனஸ் ஆகா கான் லண்டன் பத்திரிகையின் பிரதிநிதியொருவ ரோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தாரென்று தெரிகிறது. அந்தச் சமயத் தில் இந்தியா செல்வம் பெற்ற தேசமாவதால், இங்கிலாந்து அடையக்கூடிய பிரயோசனத்தைப்பற்றிப் பேசினதுந்தவிர, சக்கரவர்த்தி முடிசூட்டுக்கு வருவதைப்பற்றியும் அவர் வெகு உற்சாகத்துடன் பேசினார். சக்கரவர்த்தி யின் வரவினால் இந்தியருக்கு அளவற்ற சந்தோஷம் உண்டாயிருக்கிறதென் றும் டெல்லியில் நடக்கப்போகும் தர்பாரானது இந்தியருக்குப் பெருங் கௌரவமென்றும் அதனால் பெரும் நன்மைகள் உண்டாகக் கூடுமென்றும் சொன்னார். சக்கரவர்த்தி இந்தியாவுக்கு வந்து ஜனங்கள் மத்தியில் மகுடம் சூடுவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் ஸ்தாபிக்கப்பட்ட காலமுதல் நேரிட்ட சம்பவங்களுக்குள் பெரும் சம்பவம் என்றும் சொன்னார்.

முக்ய அறிக்கை.

சென்னை ரிப்பன் அச்சாபீசு சென்னை தம்புசெட்டி தெரு, 91-வது நம் பர் வீட்டிலிருந்து மேற்படி தெருவு, (87-வது நம்பர் வீட்டிற்கு) அதாவது புதிய சொந்தகட்டடத்திற்கு மாற்றப்பட்டமையால் நமது பத்திரிகையைப் பதிதாக கனம் மாஜிஸ்ட்ரேட் அவர்கள் முன்பாக ரிஜிஸ்டர் செய்யவேண்டி யிருந்தது.

ரிஜிஸ்டர் செய்துகொள்ளாமல் பத்திரிகையைப் பிரசுரிக்கக்கூடாது. ஆகையால் தாமதமாயிற்று. கனம் மாஜிஸ்ட்ரேட்டவர்கள யாதொரு ஜாமீ னின்றி நமது பத்திரிகையை அங்கிகரித்து பதிவுசெய்து கொண்டதைப் பற்றி நாம் மகிழ்ச்சியுடன் நமது மனப்பூர்ண வந்தனத்தை அவருக்கு அளிக்கின்றோம். நமது பத்திரிகை இனி கூடியசீக்கிரத்தில் அந்தந்த மாதத் திலேயே வெளிவரும். ஜூலைமாதப் பத்திரிகையை சென்றவருஷத்துக்குப் பாக்கியுள்ள சந்தாதாரர்களுக்கு வி. பி-யில் அனுப்ப எண்ணியிருக்கிறோம். அதைப் பெற்றுக்கொண்டு பணம் அனுப்பி உதவி புரிவார்களென்று நம்பு கிறோம். இவ்வருஷத்துக்கும் பாக்கியுள்ளவர்கள் கூடிய சீக்கிரத்தில் சந்தா வை அனுப்பி உதவிபுரிந்தால் நாம் அச்சாபீசுக்குக் கொடுக்கவேண்டிய தொகை முழுவதையும் கொடுக்கமுடியும்; இல்லாவிடின், பத்திரிகை தாமத மாகவே வெளிவரும். இதை உத்தேசித்து நமது காருண்ணிய சந்தாநேயர் கள் தங்களாலியன்ற உதவியை இப்பொழுது தவறாமல்செய்ய முன்வருவார்க ளென்று நம்பப்படுகிறது.

சீமையிலிருந்து விசித்திரமான நூதன சித்திரப்படங்கள் அடுத்த செப் டம்பர் மாதத்தில் வந்துசேருமென்பதாகக் கடிதம் வந்திருக்கிறது. அவை கள் வந்தவுடன் ஒவ்வொரு பத்திரிகையிலும் வெளிவரும்.

☞ C. S. இராமசுவாமி ஐயர்,
மாதர் மனோரஞ்சினி பத்திராதிபர்.

சொஸ்தமாக்குவதைவிட வியாதியைத்தடுப்பதுநலம்.

நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலியவியாதிகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. வியாதி எப்பொழுதும் பலஹீனமுள்ளவர்களைப் பீடிக்கிறது. அவ்விதமுள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத் தாங்குவதுகஷ்டம்

SCOTT'S Emulsion

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத்தடுத்து சரீரத்தில் தளர்ந்தநரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும், சதைகளைப்புஷ்டியுள்ளவைகளாகவும் செய்து வியாதி கிட்ட அண்டாமல் உனக்குச் சக்தியைக் கொடுக்கிறது.

மருந்து உட்கொண்ட பின் இதன் அனுபவம் தெரியும்.

கையினால் தொடப்படாமலே செய்யப்படுகிறது.

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்காட் அண்டு பௌன் கம்பெனி லிமிடெட்.

தயார் செய்கிற ரசாயன கர்த்தர், லண்டன் இங்கிலாந்து.